**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS
**Calendar Case No.382/2023**
**Prosecution Witness**:PW6

| | | | |
|---|---|---|---|
| Name | வசந்தகுமார் (PW6) | Caste | |
| Father Name | மாசிலாமணி | Calling | காவல் ஆய்வாளர் |
| Village | | Religion | |
| Taluk | திருப்பூர் | Age | 43 |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of **May 2026** by Thiru. Kulandaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது திருப்பூர் மாவட்ட கண்காணிப்பாளர் தனிப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2023 ம் வருடம் பெருமாநல்லுர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த சமயத்தில் கடந்த 24.08.2023 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு பெருமாநல்லுர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சண்முகம் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது ஈஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.328/2023 சட்டப்பிரிவுகள் 392 of IPC ன்-கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வழக்கு கோப்பை என் புலன் விசாரணைக்கு வைத்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**

நான் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செந்தில் குமார், வேலுசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் ஈஸ்வரி, இளங்கோ, பார்வதி, மூர்த்தி, செந்தில் குமார் மற்றும் வேலுசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இந்நிலையில் 25.08.2023ம் தேதி சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள கேமரா பதிவுகளை பார்வையிட்டும், ஈட்டிவீரம்பாளையம் பஞ்சாயத்து அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த CCTV பதிவுகளை பார்வையிட்டு அதன் மூலம் எதிரிகள் சென்ற இருசக்கர வாகனத்தினை அடையாளம் கண்டு அதன்படி கருமத்தம்பட்டி எலச்சிபாளையத்தில் உள்ள விநாயகா Departmental Storeல் பொருத்தப்பட்டிருந்த CCTV கேமரா பதிவுகளை பார்வையிட்டேன். அவற்றில் கிடைத்த தகவலின் அடிப்படையில் சோமனுர்-சேடர்பாளையம் சாலையில் குமரன் நகரில் உள்ள கார்த்திக் காம்பவுண்ட் அருகே மேற்படி இருசக்கர வாகனம் நிறுத்தப்பட்டிருந்ததை பார்த்து அருகில் செல்ல அந்த வீட்டின் வெளியே நின்றிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட முயற்சித்த போது அவரை பிடித்து விசாரித்தபோது அந்த நபரான இந்த வழக்கின் எதிரி சிவா என்பவர் தனது பெயர் மற்றும் விலாசம் சொல்லியும், அப்போது அந்த வீட்டின் உள்ளே இருந்து வெளியே வந்த மற்றொரு நபர் தன் பெயரை சுதா (எ) சுப்பையா என்று சொல்லியும், அவர்கள் இருவரும் சேர்ந்து வழக்கின் வாதியிடம் செயினை பறித்ததை ஒப்புக்கொண்டவர்களை அதே இடத்தில் 11.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்தேன். தொடர்ந்து அவர்களில் எதிரி சிவா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை ஆஜர் சாட்சிகள் ராஜா மற்றும் சந்தோஷ்

ஆகியோர் முன்னிலையில் 12.00 மணிக்கு பதிவு செய்தேன். தொடர்ந்து எதிரி சிவா ஆஜர்ப்படுத்திய நம்பர் பிளேட் இல்லாத கருப்பு மற்றும் வெள்ளை நிறம் கொண்ட பல்சர் NS 200 இருசக்கர வாகனம் ஒன்று, அடர் நீல நிற சட்டை ஒன்று, கருப்பு நிற கால் சட்டை ஒன்று மற்றும் Helmet ஒன்று ஆகியவற்றை 12.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் ஒரு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். தொடர்ந்து எதிரி சுதா (எ) சுப்பையா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை ஆஜர் சாட்சிகள் ராஜா மற்றும் சந்தோஷ் ஆகியோர் முன்னிலையில் மதியம் 01.10 மணிக்கு பதிவு செய்தேன். தொடர்ந்து எதிரி சுதா (எ) சுப்பையா ஆஜர்ப்படுத்திய சுமார் 4 பவுன் எடை கொண்ட அரைஞான் கொடி மாடல் கொண்ட தங்க செயின் -1, லைட் ஆரஞ்ச் நிற சட்டை ஒன்று, கருப்பு நிற கால் சட்டை ஒன்று ஆகியவற்றை மதியம் 01.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் ஒரு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.

கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரிகளுடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சி ஈஸ்வரி என்பவரின் மூலம் வழக்கு சொத்துக்கள் அடையாளம் காண்பிக்கப்பட்டு தனித்தனி படிவம் எண்.91 ன் மூலம் கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. **அந்த படிவம் எண். 91 – 2 எண்ணிக்கை (அ.சா.ஆ.14)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி ஈஸ்வரி என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே இவ்வழக்கில் தொடர்புடைய கேமரா பதிவுகளை பதிவிறக்கம் செய்து கொடுத்த சாட்சி சிவகுமார் என்பவரை விசாரித்து அவரிடம் இருந்து கேமிரா பதிவுகளில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 (B) ன் கீழான சான்றிதழ் உடன் பெற்றேன். ஈட்டிவீரம்பாளையம்

பஞ்சாயத்து அலுவலகம், கருமத்தம்பட்டி விநாயாக Departmental Stores ஆகிய இடங்களில் உள்ள CCTV பதிவுகளில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களின் **எண்ணிக்கை -5 (அ.சா.ஆ.15)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

05.09.2023 ம் தேதி காங்கேயம் நீதித்துறை நடுவர் அவர்களால் திருப்பூர் மாவட்ட சிறையில் வைத்து இரண்டு எதிரிகளுக்கும் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டு வாதியால் 2 எதிரிகளும் அடையாளம் காட்டப்பட்டனர். அந்த அடையாள **அணிவகுப்பு அறிக்கை (அ.சா.ஆ.16)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கடந்த 20.10.2023 ம் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த உதவி ஆய்வாளர் சண்முகம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே  இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 392 of IPC ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பு)</u>

சம்பவம் சம்பந்தமாக புகாரானது  ஒரு நாள் தாமதமாக பெறப்பட்டது என்றால் மாலை சம்பவம் நடந்தது மறுநாள் அதிகாலையில் புகார் தரப்பட்டது.  அந்த காலதாமதத்திற்கான காரணத்தை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா  என்றால்  பயத்தில் உடல்நிலை குறைபாடு ஏற்பட்டிருந்ததால் மருத்துவமனை சென்று விட்டு மறுநாள் புகார் கொடுத்தனர்.  மேற்படி சங்கதியை என்னுடைய வாக்குமூலத்தில் சொன்னார்களா என்றால்  சொல்லி உள்ளார்கள். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில்  எதிரிகளின் அங்க அடையாளங்களை பற்றி மற்றும் அவர் அணிந்திருந்த உடையின் நிறத்தை பற்றி சொன்னாரா என்றால் 25 வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்கள் என்று மட்டும் குறிப்பிட்டார்.முதல் உதவி சிகிச்சை பெற்ற மருத்துவமனையின் சான்றிதழ்களை பெற்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார் மற்றும் முதல்

தகவல் அறிக்கையில் நகையின் மாடல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மாங்கல்யத்தை கைப்பற்றி விசாரணை செய்தேனா என்றால் அதற்கான அவசியம் ஏற்படவில்லை. நகையின் மதிப்பை எவ்வாறு நான் நிர்ணயம் செய்தேன் என்றால் வாதி அளித்த புகாரின் அடிப்படையில் நிர்ணயம் செய்தேன். புகார்தாரர் சம்பவ இடத்திற்கு எதற்காக வந்தார் என்பதற்கான காரணத்தை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். புகாரில் புகார்தாரர் சத்தம் போட எதிரிகள் பைக்கை திருப்பி சென்று விட்டார்கள் என்று உள்ளது என்றால் சரிதான், செயினை பறித்து திருப்பி சென்றார்கள் என்று உள்ளது. எதிரிகள் இருவரும் நான் அணிந்திருந்த மற்றொரு செயினை பிடுங்கி சென்றுவிடுவார்கள் என்று என் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கையில் சாட்சியமளித்துள்ளார் இது பற்றி என்னுடைய விசாரணையின் போது புகார்தாரர் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. நகையை பறித்த சமயத்தில் புகார்தாரருக்கு காயம் எதுவும் ஏற்பட்டதா என்றால் இல்லை. நகை புகார்தாரர் ஈஸ்வரிக்கு தான் சொந்தமானது என்பதை நான் அந்த ரசீதுகளை பெற்று விசாரணை செய்தேனா என்றால் ரசீது எதுவும் கைப்பற்றவில்லை. அந்த நகையை புகார் அணிந்தது போல் புகைப்படம் பெற்று அதை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் அவசியம் ஏற்படவில்லை வாதியும் எதிரிகளும் சென்ற சிசிடிவி பதிவுகளில் புகார்தாரர் எதிரிகளை அடையாளம் காண்பித்த போது அதிலிருந்தது. கைப்பற்றின நகையில் எந்த ஒரு சேதாரமும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் அருகில் இருந்த நபர்களை விசாரித்து சாட்சிகளாக சேர்த்துள்ளேனா என்றால் சம்பவ இடத்திற்கு அருகாமையில் காலியிடம் தான் உள்ளது. ஈட்டி வீரம்பாளையம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு எழுத்து மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்தேனா என்றால் இல்லை வாய்மொழியாக அவர்கள் அனுமதித்தார்கள். 65 B சான்றிதழ் பெறும் நபரிடமிருந்து பெற்ற பென் டிரைவ் காப்பியை நான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்தேனா என்றால் இல்லை புகைப்படங்களை மட்டும் தாக்கல் செய்துள்ளேன். எதிரிகளை கைது செய்த இடத்தில் அந்த வீட்டின் உரிமையாளர்களை விசாரணை செய்து சாட்சியாக சேர்த்து உள்ளேன் என்றால் அவர் அங்கு இல்லை அதனால் சாட்சியாக சேர்க்கவில்லை. கார்த்தி காம்பவுண்ட் மகாராஜா வீடு அடுக்குமாடி குடியிருப்பா அல்லது லைன் வீடா என்றால் லைன் வீடு. எத்தனை வீடுகள் அங்கு இருந்தது என்றால் பூட்டிய நிலையில் வீடுகள் இருந்தது எண்ணிப் பார்க்கவில்லை. எதிரியை லைன் வீட்டில் எத்தனாவது வீட்டில் கைது செய்தேன் என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் எண்ணிக்கை குறிப்பிடவில்லை மகாராஜன் என்பவரின் வீட்டிற்கு முன்பு வைத்து கைது செய்தேன். அந்த வீட்டின் முன்பு உள்ள கேட்டின் நிறம் என்னவென்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் கைப்பற்றிய இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தெரிந்து கொண்டு வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்யவில்லை, வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தெரிந்து கொள்ளவில்லை. எதிரிகளை கைது செய்த போது என்னுடன் எத்தனை காவலர்கள் இருந்தார்கள் என்றால் மூவர். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தட்டச்சு செய்த காவலரை விசாரித்து நான் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அரசால் வழங்கப்பட்ட மடிக்கணினியில் தான் தட்டச்சு செய்யப்பட்டது அதனை நான் குறிப்பிடவில்லை. எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய செயின் 4 பவுன் என்று குறிப்பிட்டுள்ளேன் அது எதன் அடிப்படையில் நான்கு பவுன் என்று நிர்ணயம் செய்தேன் என்றால் வாதி புகாரில் தெரிவித்திருந்தார் மேலும் எனது அனுபவத்தின் அடிப்படையில் நிர்ணயம் செய்தேன். நகை பற்றி அடையாள அணிவகுப்பு நடத்தினேனா என்றால் இல்லை நகையை காண்பித்து கேட்டேன். கைப்பற்றிய இருசக்கர வாகனம் ஓடும் நிலையில் இருந்த இரு சக்கர வாகனம். அதன் சாவியை தனியாக கைப்பற்றி பி ஆர் செய்தேனா என்றால் தனியாக செய்யவில்லை. சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எந்த புகார் தரப்படவில்லை

முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. வாதி நகையை தொலைத்து விட்டு பொய்யான புகார் அளித்துள்ளார் என்றும் அந்த பொய்யான புகாரின் அடிப்படையில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. சம்பவ இடம் ஆனது அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதி என்றால் இல்லை, கிராமத்து சாலை. இவ்வழக்கீல் பட்டியல் சாட்சிகள் அனைவரும் புகார்தாரருக்கு தெரிந்த நபர்கள் என்றும் மூன்றாம் நபர்கள் யாரும் சாட்சிகளாக இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |